செய்தி வெளியீடு எண்:908 நாள்:20.10.2021

**குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுக் குறும்படம் தயாரித்த மாணவர்களுக்கு சிறந்த குறும்படத்திற்கான பரிசுத்தொகைகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார்.**

குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுக் குறும்படம் தயாரித்த மாணவர்களுக்கு சிறந்த குறும்படத்திற்கான காசோலைகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (20.10.2021) வழங்கினார்.

சிறார் நீதிக்குழு (**Hon'ble Juvenile Justice Committee**) சென்னை உயர்நீதி மன்றம் ஆணைக்கிணங்க, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் குறும்படம் தயாரிப்பதற்கு **D.F.T.** மற்றும் **Viscom** பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், மாணவர்களால் தயாரித்து வழங்கப்பட்ட குறும்படங்களில் அரசின் தேர்வுக்குழுவினரால் போட்டி முறையில் தேர்வு செய்யப்பட்ட சிறந்த குறும்படங்களான தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர் திரு.எம்.ஆனந்தன் அவர்கள் தயாரித்த **வலி** என்ற குறும்படத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி மாணவர் திரு.வி.பிரசாந்த் அவர்கள் தயாரித்த **பாரதி** என்ற குறும்படத்திற்கு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கான பரிசுத்தொகைகளை காசோலைகளாக மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கி மாணவர்களை பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப, அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், முனைவர்.வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப.,அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9